பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 09 செவ்வாய்க்கிழமை (23 06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 208

# 4 ஆயிரத்துக்கும் அதிக படையினர் இராணுவத்திலிருந்து தப்பி ஓட்டம்!

## மேலும் பலர் தற்கொலை

கொழும்பு, ஜூன் 23

இராணுவத்தில் ஏற்பட்ட ஆறாயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிதாகப் படையினர் திரட்டப்பட்டுள்ளனர். இராணுவத்தில் இருந்து நான்காயிரத்துக்கும் அதிகமானோர் தப்பி ஓடியதனாலும், பலர் தற்கொலை செய்து கொண்டதனாலும் ஏனையோர் யுத்த முனையில் காயமடைந்ததினாலும் இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டன.

பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

போர்முனையில் நீண்ட காலமாக தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் படையினரின் பொறுப்புக்களை ஏற்று அவர்களை விடுவிக்க சுழற்சி முறையில் பல பிரிவுகள் இயங்கி வருகின்றன.

தாக்குதல நடவடிக்கைகளில் படையினர் இடைவெளி இன்றி ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதனால் ஒய்வு இன்றி மனவிரக்தி அடைந்த நிலையில் படையினர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இன்னும் சில படையினர் தமக்குத் தாமே காயங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

—இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன என 'ஐலண்ட்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

[மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்]

### யுத்தமுனைக்குச் செல்ல மறுத்து

## வழக்குத் தாக்கல் செய்த மேஜர் தெல்லிப்பழைக்கு!

கொழும்பு, ஜூன் 23

போர்முனையில் பணி புரிவதில் இருந்து தப்புவதற்காக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்து தோல்வி கண்ட இராணுவ மேஜர் டபிள்யு. எம் ஆர். விஜசுந்தர கடந்த புதன்கிழமை தெல்லிப்பழைக்கு அனுப்பப்பட்டார்.

இலங்கை இராணுவ காலாட் படையைச் சேர்ந்த மேஜர் விஜசுந்தர தெல்லிப்பழையில் உள்ள துருப்புக்களுடன் சேர்ந்து யுத்தக் கடமையில் ஈடுபட்டுள்ளார் என்று ''சண்டே ஒப்சேர்வர்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

போர்முனைக் கடமையில் இருந்து தப்புவதற்காகவே மேஜர் விஜசுந்தர அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் என்று மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் கடந்த 15 ஆம் திகதி தீர்மானித்தது. அதனைத் தொடர்ந்து மேஜர் விஜசுந்தர தாக்கல் செய்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது

கடந்த 11 ஆம் திகதி முதல் பலாலி இராணுவ முகாமில் கடமைக்கு ஆஜராகும்படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்குப் பகுதியில் அவ்ரோ ஏற்படுத்திய கிலி

வலி. வடக்கு, வலி. மேற்கு மற்றும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகள் மீது நேற்றுப் பிற்பகலில் ''அவ்ரோ'' ஒன்று பல தடவைகள் வட்டமிட்டதால் மக்கள் பதற்றமடைந்து அல்லோலகல்லோலப்பட்டனர்.

வட்டமிட்ட ''அவ்ரோ'' குண்டு வீச்சை நடத்தலாம் என்று பயந்து ஓடிய மாணவன் ஒருவன் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்தான்.

நேற்று மாலை 3-45 மணியளவில் சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலைப் பகுதிகளை ''அவ்ரோ'' விமானம் ஒன்று எட்டுக்கு மேற்பட்ட தடவைகள் வட்டமிட்டது.

இதனால் பதற்றமடைந்த மக்கள் ஆலயங்களுக்கும் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கும் தஞ்சம் தேடி ஓடினர்.

மல்லாகம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயின்று கொண்டிருந்த மாணவர்களும் பாதுகாப்பு தேடி ஓடினர். இப்படி ஓடிய மாணவர்களில் கதிரவேலு ஜீவன் [8 வயது - சுன்னாகம் தெற்கு] என்ற மாணவன் மினிபஸ்ஸில் மோதுண்டு, தலையிலும் கையிலும் பலத்த காயங்களுடன் மயக்கமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்.

முன்னதாக பிற்பகல் 2-45 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியின் மீதும் ''அவ்ரோ'' விமானம் பல தடவைகள் வட்டமிட்டுச்சென்றது.

## வீரமரணம்

மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10.40 மணியளவில் இயக்க வேலையாகச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது பதுங்கியிருந்த படையினர் தாக்குதல் நடத்தியதில் இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இரண்டாம் லெப்ரினன்ட் நிர்மன் [நாகலிங்கம் தவச்செல்வன் — ஆரையம்பதி], 2 ஆம் லெப்ரினன்ட் துசிதன் [செல்வநாயகம் ரகுநந்தன் — கொக்கட்டிச்சோலை] ஆகியோரே வீரமரணம் அடைந்தனர்.

இதே சமயம் —

பலாலியில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப். சோழன் [செபஸ்டியன் விஜயராஜ் — குருநகர்] வீரமரணமடைந்தார். [உ-3-51]

## பிரேமா அரசுக்கு எதிராக இன்று கொழும்பில் பூசை!

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பிறந்த தினமான இன்று அவரது அரசுக்கு எதிராக கொழும்பில் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

காணாமற்போனோரின் தாய்மார், மனைவியர் என சுமார் ஐநூறு பேர் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இன்று கூடி மாநாடு ஒன்றை நடத்தவுள்ளனர். அன்னையர் முன்னணியின் இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பங்குபற்றுவார்.

காணாமற்போனோரின் உறவினர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றும் பூசை மற்றும் வழிபாடு நிகழ்ச்சி ஒன்று இன்று மாலை கொழும்பு முகத்துவாரம் காளிகோவிலில் நடைபெறவுள்ளது. [உ-10]

### பல்கலைக்கழக அனுமதி முறை:

## அரசின் முடிவைக் கண்டித்து எதிர்ப்பு நடவடிக்கை

1990 ஆகஸ்ட் ஜி.சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையையும், 1991 ஏப்பிரலில் நடந்த விசேட பரீட்சையையும் — பல்கலைக் கழக அனுமதி விடயத்தில் — வெவ்வேறானவையாகக் கருதுவது என்று அரசு எடுத்த முடிவைக் கண்டிக்கும் வகையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மாணவர்கள் முஸ்தீபு செய்து வருகின்றனர்.

எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் உயர் வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கூடுகின்றார்கள்.

இக்கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அழைத்திருக்கிறது.

இதே சமயம் —

அரசின் புதிய கொள்கையைக் கண்டித்து கல்வியுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு அமைப்புகள் அறிக்கை வெளியிட்டுள்ளன; உயர்கல்வி அமைச்சர், ஜனாதிபதி ஆகியோருக்கும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன. (உ-3)

### நாடு கடத்தல் பற்றி ஆராய

## இந்திய அதிகாரிகள் குழு கொழும்பு வருகின்றது!

கொழும்பு, ஜூன் 23

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் மற்றும் உளவுப் பிரிவுத் தலைவர் திரு. பொட்டம்மான் ஆகியோரை நாடு கடத்துவது தொடர்பான வழிமுறைகள் பற்றிப் பேச்சுக்கள் நடத்த இந்தியாவில் இருந்து உயர்நிலை அரச அதிகாரிகள் குழு ஒன்று நேற்று (திங்கள்) கொழும்பு வர இருந்தது.

இத்தகவலை கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா ''சண்டே ரைம்ஸு''க்கு அளித்த பேட்டி ஒன்றில் வெளியிட்டார்.

இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுகளை நடத்திய பின்னர் ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள திரு. பிரபாகரனையும் திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி - தமிழ்க் கட்சிகள் சந்திப்பு

## கூட்டறிக்கை வெளியிடும் திட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 23

கடந்த 15 ஆம் திகதி நடந்த ஜனாதிபதி — தமிழ்க் கட்சிகள் சந்திப்பின் பின்னர் அரசுடன் சேர்ந்து கூட்டறிக்கை வெளியிட தமிழ்க் கட்சிகள் மறுத்து விட்டன.

'சண்டே ரைம்ஸ்' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

அச்சந்திப்பு தமிழ்க் கட்சிகளுக்கு ஏமாற்றம் தருவதாக அமைந்து விட்டதன் பின்னர்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆதரவு இல்லாத எந்தத் தீர்வும் பயனற்றது!

### மோதிலால் நேரு கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 23

வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவில்லாது காணப்படும் எந்தத் தீர்வும் பயனற்ற ஒரு நடவடிக்கையாகவே அமையும்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிரதித் தலைவரும், சட்டத்தரணியுமான திரு. மோதிலால் நேரு முன்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் எட்டு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசினார்கள் என்பது தெரிந்ததே.

அது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே திரு. மோதிலால் நேரு முன்கண்டவாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்படவேண்டும்; ஏனைய தமிழ்க் கட்சிகள் இதில் சம்பந்தப்படுவது பொருத்தமற்றது என்றும் திரு. மோதிலால் நேரு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

தீர்வு காணும் தேடுதல் நடவடிக்கையில் ஏனைய தமிழ்க்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சந்தேக நபர்களை

## பிறநாட்டிலிருந்து கடத்துவதற்கு அமெரிக்க நீதிமன்று அங்கீகாரம்!

வாஷிங்டன், ஜூன் 23

இன்னொரு நாட்டுடன் நாடு கடத்தும் உடன்படிக்கையை அமெரிக்கா வைத்திருந்தாலும், தமது நாட்டில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தத் தேவைப்படும் வெளிநாட்டுப் பிரஜைகளை அமெரிக்க அரசாங்கம் கடத்திக் கொண்டு வரலாம்.

ஒன்பது நீதியரசர்களைக் கொண்ட அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் 6 நீதியரசர்கள் இவ்வாறு கடந்த வாரம் தீர்ப்பளித்தனர்.

மூன்று நீதியரசர்கள் இத்தீர்ப்புக்கு எதிராகக் கருத்து வெளியிட்டனர். சாதகமாக தீர்ப்பளித்த நீதியரசர்களில் பிரதம நீதியரசர் வில்லியம் எச். ரெலின் குயிஸ்ற்றும் ஒருவர் ஆவார்.

அமெரிக்க அரசாங்கத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அலம்பிலில் சிப்பாய் பலி

கொழும்பு, ஜூன் 23

கடந்த சனியன்று முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். கூட்டுப்படைத் தலைமையக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (உ-எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோழி உரம் விற்பனைக்கு உண்டு. Nallur Farm Centre, இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [21488]

---

சங்கீதம் வினா-விடை, கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், ஸ்ரீகாந்த், ஞானசுரபி, பாலாஜி, தினேஷ், மக்மிலன், மண்டேலா, ஆல்சிலோன், சோபிதா, ஸ்ரீலங்கா, வாலாம்பிகா, சுப்பிரமணியம், பிரசாந்தி, அறிவாலயம், திருமகள், ஸ்ரீகாந்தா, நடுவுத்துருத்தி. [21495]

---

நல்ல இன [யமுனாபாறி + காமோறி] பால் ஆடு 28 நாள் குட்டியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 3, சீனியர் ஒழுங்கை (தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். [21491]

---

60 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்ட தகரக் கரை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரவி றேடர்ஸ், மழக்கடை, திருநெல்வேலி சந்தி. (4778)

---

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் சிவப்பு, வெள்ளை, கறுப்பு இன பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. பேடு விலை 45 ரூபா, சேவல் விலை 20 ரூபா. சிங்கம் வீதி, உடுவில், மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, வலது புற சிங்கம் வீதி. [20599]

### விற்பனையாகின்றன

A/L வினா-விடை [உயர் கல்விப் பதிப்பகம், கொழும்புத்துறை] C.R கொப்பிகள், 5 ஆம் ஆண்டு கட்டுரைத் தேன்துளி 60, China கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

[21467]

### தேங்காய் விற்பனை

தேங்காய், தேங்காய் மட்டை என்பன நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். தொடர்பு: ஸ்ரீசுகந்தி சேல்ஸ் சென்ரர் (நாவலர் கல்வி கழகத்துக்கு அருகில்) 383, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. [21492]

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

Prima - Lohman ஒரு கிழமை நிரம்பிய சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [21487]

---

பதிவுசெய்க பழைய விலாசம்: இல. 9, சந்தையா லேன், சுன்னாகம். புதிய விலாசம்: சிங்கம் வீதி, உடுவில் மகளிர் பாடசாலை முன், மல்வம் வீதி, ஊடாக, முதலாவது ஒழுங்கை. [20660]

## நூல் நிலைய கிளைகள்

தென்மராட்சி, ஜூன் 23

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மிருசுவில், நாவற்குழி, வரணி ஆகிய உப அலுவலகப் பகுதிகளில் மூன்று நூல் நிலையக் கிளைகள் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டன. [இ-117]

## உற்சவம்

குருநகர், ஜூன் 23

நவாலியூர் சென். பீற்றர்ஸ் தேவாலய வருடாந்த நவநாள் திருநாட்கள் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

28 ஆம் திகதி மாலை 4 மணிக்கு சற்பிரசாத வழிபாடும், சுற்றுப் பிரகாரமும் இடம்பெறும்.

29 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுப் பாடல் திருப்பலியை அடுத்து திருச்சொரூபத் தேர்பவனி நடைபெறும். [இ-51]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 23

காரைநகர் களபூமி, திக்கரை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் யாழ்நகர் கே. கே. எஸ். வீதி ஸ்ரீ கதிரேசன் கோவிலில் இன்று செவ்வாய் நடைபெறும். [உ-5]

# தடுப்புக்காவலில் உள்ளோர் வழக்குத் தொடர உதவி

## மனித உரிமைகள் குழு வழங்கும்

கொழும்பு, ஜூன் 23

மூன்று வருடங்களுக்கு மேலாக தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளவர் விடுதலை கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய சட்ட - நிதி உதவிகளை வழங்க மனித உரிமைகள் செயலணிக் குழுத்தலைவர் திரு. சூஸா முன் வந்துள்ளார்.

பள்ளேகல, களுத்துறை, பொலவத்த, பூஸா, வீரவில தடுப்பு முகாம்களில் சுமார் 6584 பேர் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மூன்று வருடங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை சந்தித்து உரையாடிய போதே திரு. சூஸாவினால் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

அதேவேளை மட்டக்களப்பு, மாத்தறை, கண்டி ஆகிய பகுதிகளில் மனித உரிமைகள் செயலணிக் கிளைகள் திறக்கப்படவிருக்கின்றன. அந்த அந்த பகுதி மக்களின் வசதி கருதியே கிளைகள் திறக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்புக் கிளை அடுத்த மாதம் மூன்றாம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கிறது. [இ-3]

## நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கு ஒன்றில் பல்கலைக்கழக நூலகர் திரு. எஸ். முருகவேள் "இந்திய ஆயுள்வேத வைத்திய சாஸ்திர நூல்கள் — ஓர் அறிமுகம்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூகவியல் பகுதி இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. [உ]

## திசைமாறிய ரொக்கெட்

இந்தியாவில் பரீட்சார்த்தமாக ஏவப்பட்ட ரொக்கெட் ஒன்று திசை மாறிச் சென்று கிராமம் ஒன்றைத் தாக்கியது.

எனினும் அச்சம்பவத்தின் போது கிராமத்தில் எவரும் காயமடையவில்லை என்று பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

கிழக்கு இந்தியாவில் உள்ள ஏவுகணை, ஏவும் தளம் ஒன்றில் இருந்து அந்த ரொக்கெட் ஏவப்பட்டது.

இத்தகவலை பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் வெளியிட்டது. [த-எ]

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சுப்பிரமணியம் சகாதேவன்

(தொழில் நுட்பவியலாளர் ]- இலத்திரனியல் பௌதிகதுறை யாழ். பல்கலைக் கழகம்)

| மலர்வு: | அரக்கர் அழிப்பு: |
|---|---|
| 09 - 06 - 1957 | 16 - 06 - 1992 |

சத்தியமே மறவாத சகாதேவனே
சடுதியில் மறைந்து விட்டீர் எம்மைவிட்டு
சாகவும் துணிந்து சென்ற சகாதேவனே
சத்தியமாய் உமை மறவோம் சகாதேவனே

16 - 06 - 1992 அன்று அகாலமரணமான அமரர் சுப்பிரமணியம் சகாதேவன் அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக் கொள்கிறோம். அன்னாரின் உற்றார், உறவினர், நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

பௌதிகத்துறை
பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்,
உத்தியோகத்தர்கள்
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

(21499)

# கேள்வி அறிவித்தல்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலைகள் விவரம் | ஆகக் குறைந்தளவு நிர்மாண, பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவுத் தொகை | நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவுத் தொகை | மீளளிக்கக் கூடிய கட்டுப் பணம் | மீளளிக்கப்படாத கட்டுப் பணம் |
|---|---|---|---|---|
| 1. இல்ரோம் புனரமைத்தல் மைல் 1 | 575,000/- | 200,000/- | 250/- | 50/- |
| 2. இல்ரோம் புனரமைத்தல் மைல் 11 | 600,000/- | 200,000/- | 250/- | 50/- |
| 3. இல்ரோம் புனரமைத்தல் மைல் 111 | 575,000/- | 200,000/- | 250/- | 50/- |
| 4. எமேசன் ரோட். புனரமைப்பு மைல் 1 | 550,000/- | 200,000/- | 250/- | 50/- |
| 5 எமேசன் ரோட் புனரமைப்பு மைல் 11 உம் 111 உம் | 675,000/- | 225,000/- | 250/- | 50/- |

நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்திலும் (ஐ. சி. ரி. ஏ. டி.) நீர்ப்பாசனத் திணைக்களத்திலும் பதிவு செய்த ஒப்பந்தக்காரர் மாத்திரம் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப் படிவங்கள் கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து 1992-06-22 தொடக்கம் 1992-07-20 ஆம் திகதிவரை வேலை நாட்களில் 9-00 மணியிலிருந்து பி. ப. 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கிளிநொச்சிப் பிராந்தியம், கிளிநொச்சி என விலாசமிடப்பட்டு 1992 - 07 - 22 ஆம் திகதி மு. ப. 10-00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது இதற்கெனப் பிரதிப் பணிப்பாளரின் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ போடப்பட வேண்டும்.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர் கேள்விப் பத்திரம் அடங்கியுள்ள தபால் உறையில் இடது பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

எந்திரி. ந. நவநேசன்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பிரிவு.

கிளிநொச்சி.
19-06-1992.

[இ-2141]

---

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது

# முக்கிய அறிவித்தல்

## அங்கத்தவராகுதல்

30-06-92 வரை உள்ள அங்கத்துவப் பதிவேட்டின் அடிப்படையில் வாக்காளர் பதிவேடு மூடப்பட இருப்பதால், அனைவரையும் தங்கள் கிளைகளுடன் தொடர்பு கொண்டு அங்கத்தவராகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பு. நவரத்தினம்
செயலாளர்

யாழ். ப. நோ. கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
22-06-92

[இ/2143]

---

# Y.M.C.A. யாழ்ப்பாணம்
# Y.T.C. பரந்தன்

யாழ்ப்பாணம் Y. M. C. A. யின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இளைஞர் பயிற்சி நிலையத்தில் 6 மாத கால விவசாயப் பயிற்சி நெறி ஆரம்பமாகிவிட்டது. இப் பயிற்சி நெறியை தொடர விரும்புவோர், உடனடியாக பணிப்பாளருடன் தொடர்பு கொள்ள வேண்டப்படுகின்றனர்.

கல்வித் தகைமைகள்: க. பொ. த. (சாதாரணம்)
வயதெல்லை: 17 — 23 வருடம் (ஆண்கள் மட்டும்)

★ பயிற்சிக் காலத்தில் இலவச தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.

**கற்பிக்கப்படும் பாடங்கள்:**

1. பயிர் வேளாண்மை
2. விவசாயத் தாவரவியல்
3. பூங்கனியியல்
4. பயிர் பாதுகாப்பு
5. மண்ணியல்
6. மிருக பரிபாலனம்
7. விவசாயப் பொறியியல்

பணிப்பாளர்,
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.

[சி-2142]

---

உ

காரைநகர் களபூமி

# திக்கரை முருகமூர்த்தி கோவில்
# வருடாந்த மகோற்சவம்

## திக்கரை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம்

கே. கே. எஸ். வீதி,
ஸ்ரீ கதிரேசன் கோவிலில்

**23 - 06 - 1992 செவ்வாய்**

பகல் விசேட அபிஷேக ஆராதனையுடனும்
1008 சங்காபிஷேகத்துடனும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து

இரவு விசேட மேளக் கச்சேரிகள் இடம்பெறும்.

★ இணுவில் K. R. புண்ணியமூர்த்தி, சுந்தரமூர்த்தி
★ அளவெட்டி சிதம்பரநாதன்
★ மலேசியா, சிங்கப்பூர் புகழ் — V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
★ அளவையூர் N. K. பத்மநாதன்

★ பிரபல வில்லிசைப்புலவர் ★
கலாவினோதன் சின்னமணி குழுவினரின்
★ வள்ளி திருமணம் ★
என்னும் பொருள் பற்றி வில்லிசையும்
அருணா கோஷ்டியினரின்
இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து எம்பெருமான் முருகனுக்கு திருக்கல்யாணமும், பூந்தண்டிகையில் சுவாமி வீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் இம் மகோற்சவத்தில் பங்குபற்றி, எம்பெருமானின் திருவருட்கடாட்சத்தைப் பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

விழா அமைப்பாளர் -
காரைநகர் களபூமி பொதுமக்கள்.

[21489]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வழக்கை உடனே தாக்கல் செய்க!

1990ஆம் ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கு, பிறமாகாணங்களில் நடந்த ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சையையும், வடக்கு - கிழக்கில் நடந்த விசேட பரீட்சையையும் வெவ்வேறாகக் கணிக்கப் போவதாக உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ.சீ.எஸ் ஹமீத் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிக்கை சமர்ப்பித்து விட்டார்.

அரசாங்கத்தின் இந்த முடிவு தமிழ் மாணவர்களின், மிகக் குறிப்பாக வடபகுதி மாணவர்களின் உயர்கல்வி வசதியை பறிக்கும் ஓர் அடாத்தான செயலாகும். எழுபதுகளில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தலைப் போன்றது இது, என்று இம்மாதம் 17ஆம் திகதியன்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

1979ஆம் ஆண்டில் நடந்த உயர்தர பரீட்சையையும், எச்.என்.சீ.ஈ. பரீட்சையையும் ஒன்றாகக் கருதி பல்கலைக்கழக அனுமதி வழங்க முடியுமென்றால் இப்போது மட்டும் ஏன் அவ்வாறு செய்ய முடியாது?

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓரங்கட்டுதல் ஆகாது என்பது விதி.

ஆனால் பல்கலைக்கழக அனுமதி விடயத்தில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து தோற்றிய மாணவர்களுக்கு ஓரங்கட்ட அரசு முடிவு செய்திருக்கிறது. அவர்களின் கல்வி பெறுவதற்கான அடிப்படை உரிமையைப் பறிப்பதற்கு முனைந்துள்ளது.

இது தடுக்கப்பட்டாக வேண்டும். அதற்கு ஒரே ஒரு பயனுள்ள வழி. அரசாங்கத்தின் இந்த முடிவு அடிப்படை உரிமையை மீறுவதாகவும், அந்த முடிவிற்கு இணங்க பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதைத் தடை செய்யக் கோரியும் பாதிக்கப்பட்டுள்ள மாணவர் அல்லது அவரது பெற்றோர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.

ஜூலை மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவராவது வழக்கைத் தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்குச் செலவுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் தேவைப்படலாம். ஆனால் பத்து மாணவர்களின் பெற்றோர் சேர்ந்து ஒரு மனுவைத் தாக்கல் செய்தாலும் அதனால் சாதகமான தீர்ப்பு கிடைக்கும் பட்சத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் நலன்பெறுவர்.

அது மட்டுமல்ல 1991ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியிலும் இந்த அநீதியால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்படும்.

தமிழ் மாணவரின் அடிப்படை உரிமையை மீறும் அரசின் புதிய முடிவுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள் எல்லோரும் எதிர்ப்புத் தெரிவித்து பல விதமான போராட்டங்களை நடத்துவது குறித்தும் சிந்திக்கப்பட வேண்டும்; அவ்வழி செயற்பட வேண்டும்.

அப்போது தான் தமிழர்களின் அரசியல் உரிமைகள் மட்டுமன்றி அடிப்படை உரிமைகளும் பறிக்கப்படுகின்றன என்பதை உலகுக்குக் காட்டமுடியும். நீதிமன்றத்தில் நியாயம் கேட்பது ஒரு முனைப் போராட்டம் என்றால் ஆர்ப்பாட்டம், பகிஷ்கரிப்பு போன்றவை இரண்டாவது முனைப் போராட்டமாக அமையலாம்.

# அரசு சார்பில் புலிகளுடன் பேச தொண்டா தயார்!

## தேவை ஏற்படின் யாழ்ப்பாணமும் வருவாராம்

கொழும்பு, ஜூன் 23

அரசாங்கத்தின் சார்பில் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்த நான் தயாராகவுள்ளேன். தேவை ஏற்பட்டால் யாழ்ப்பாணத்துக்கும் நான் செல்வேன்;

அமைச்சர் தொண்டமான் 'சண்டே ரைம்ஸ்'க்கு அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு நான் எதிரானவன் அல்லன். ஆனால், விடுதலைப் புலிகளை இல்லாமற் செய்வது பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதை கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழர்களின் அபிலாஷைகளை நாம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் நீதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டும் எனது பணியில் 'பூனைக்கு மணி கட்டும் நடவடிக்கை' உட்பட பல துணிச்சல் நடவடிக்கைகளை எடுக்க நான் தயாராக இருக்கின்றேன் என பிரதிக்ஞை செய்கின்றேன்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரச்சினையை ஆரம்ப கட்டத்தில் சரியான முறையில் அணுகாதபடியினால் தான் அது இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது.

'பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசியல் வாதிகள் துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; அவை அவர்களின் அரசியல் வாழ்வுக்கு முடிவு கட்டுவதாக இருந்தாலும் கூட அவர்கள் தயங்கக் கூடாது.

இம் மாதம் 29 ஆம் திகதியில் இருந்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு தினமும் தனது அமர்வுகளை நடத்த உள்ளது'—

இவ்வாறு திரு. தொண்டமான் தனது பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

## அரிசி இறக்குமதி

கடந்த பெரும் போகத்தில் உள்நாட்டு அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட 7.7 சதவீத வீழ்ச்சியைச் சமாளிப்பதற்காகவும் அடுத்த பன்னிரண்டு மாதங்களுக்குத் தேவையான கையிருப்பைச் சீராக வைத்திருப்பதற்காகவும் 2 லட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த அரிசி இறக்குமதி எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிலும் பார்க்க மேலதிகமாக 50 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இந்த ஆண்டு இறக்குமதி செய்யப்படவுள்ளது. (ஓ எ)

# படையினரின் அனுமதிப் பத்திரம் இன்றி வவுனியாவில் நடமாட முடியாது

படையினரின் அனுமதிப் பத்திரம் இன்றி வவுனியா நகரில் நடமாடுவோர் கைது செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் வசிப்போருக்கு நிரந்தர அனுமதி அட்டை, தற்காலிக அனுமதி அட்டை என இருவிதமான குடியிருப்பு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொழும்பில் இருந்து வவுனியா வந்து அங்கு ஒரு நாள் தங்கவேண்டி நேரினும், சம்பந்தப்பட்டவர்கள் வவுனியா ரயில் நிலையத்தில் இராணுவத்தினரிடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற வேண்டும். தற்காலிக அனுமதி அட்டை இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஒரு நாளுக்கு மேல் வவுனியாவில் தங்க வேண்டுமாயின் அங்குள்ள பொலீஸ் நிலையத்தில் அதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.

இத்தகவல்களை கொழும்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. (இ-5)

# புதியராணுவநடவடிக்கைக்கு 'வடமராட்சி' என்று பெயர்

## கொழும்புப் பத்திரிகை கூறுகிறது

கொழும்பு, ஜூன் 23

வட பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளவிருக்கும் புதிய இராணுவ நடவடிக்கைக்கு "வடமராட்சி" என்று பெயரிடப்பட்டிருப்பதாகவும் —

இத் தாக்குதல் எந்த நேரமும் இடம் பெறலாம் என்றும் —

இராணுவ உளவு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

"வடமராட்சி" இராணுவ நடவடிக்கை கட்டைக்காடு, சாவகச்சேரி முதலிய பகுதிகளை உள்ளடக்கியதாக யாழ்ப்பாணத்தில் முடிவடையக் கூடியதாக இருக்கும் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் நடவடிக்கை விடுதலைப் புலிகளின் பலத்தை மேலும் குறைப்பதை இலக்காக வைத்தே நடத்தப்படும் என்றும் — இதற்காக துருப்புகள் ஒன்று சேர்க்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதியில் இருந்து கிடைக்கும் அறிக்கைகள் தெரிவிப்பதாக "சண்டே ரைம்ஸ்" செய்தியில் கூறப்பட்டுள்ளது. [இ-எ]

## 4 இலங்கையர் நாகபட்டணத்தில் கைது

இலங்கை மீனவர்கள் எனக் கருதப்படும் நால்வர் கடந்த சனி இரவு தமிழ் நாட்டின் நாகபட்டணம் கடற்கரையில் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இங்கிருந்து இலங்கைக்கு டீசல் கடத்த வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக சென்னைப் பொலீஸார் தெரிவித்தனர். [இ-5]

# 6 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்ப இராணுவத்தில் புதிதாக ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 23

இராணுவத்தில் ஏற்பட்ட ஆறாயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிதாகப் படையினர் திரட்டப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள் மூன்று மாத காலப் பயிற்சி அளிக்கப்பட்ட பின் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பகுதிகளைக் காவல் புரியும் பணியில் ஈடுபட்டு வரும் தாக்குதல் நடத்தும் படையினரை விடுவிக்க புதிதாகத் திரட்டப்பட்ட படையினரில் ஒருபகுதியில் அப்பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்போது கைப்பற்றப்பட்ட பகுதிகளை பராமரிக்கும் பொறுப்பு விமானப்படை மற்றும் கடற்படை ஆகியவற்றில் உள்ள தரைத் துருப்புகளிடம் விடப்பட்டுள்ளது.

புதிதாக 6 ஆயிரம் பேரை படைக்குச் சேர்த்துள்ளதால் அரசுக்கு புதிதாக செலவினம் ஏற்படவில்லை என்றும் —

இறந்தவர்கள் மற்றும் விட்டு ஓடியவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் ஆகியோர் பாவித்த ஆயுதங்களே புதியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

முப்படைகளுக்கும் புதிதாக ஆட்களைத் திரட்டுவதை அரசு இடைநிறுத்தி வைத்துள்ளது தெரிந்ததே. (இ-எ)

## குடும்ப அட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 23

குரும்பசிட்டி கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான குடும்ப அட்டைகள் அளவெட்டியில் உள்ள கிராமசேவையாளர் அலுவலகத்தில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [இ]

# கொழும்பு வெள்ளத்துக்கு தேவ கோபம் காரணமா?

## சபையில் எம் பி. ஒருவர் கேள்வி

கொழும்பு, ஜூன் 23

"கொழும்பில் வெள்ளம் வந்ததற்கு தேவ கோபம் காரணமாக இருக்கலாமோ தெரியாது. இனியாவது நாம் தவறுகளைத் திருத்திக் கொள்ளவேண்டும்"

இப்படிக் கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் கே. பி. ரத்னாயக்கா.

கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்த நாடாளுமன்றத்தில் வெள்ளம் வரும் என நாம் நினைத்திருக்கவில்லை. ஆனால் வெள்ளம் வந்துவிட்டது. இத்தகைய அனர்த்தங்கள் நடக்கும் போது எதிர்க்கட்சியினர் வாய்மூடி இருக்கக் கூடாது.

இம்மாதம் 26ஆம் திகதி நாட்டுக்கு ஒரு மோசமான நாள் எனக் கூறப்படுகிறது. இந்த நாட்டுக்கு ஏதோ தீமை நடக்கப்போகிறது. இந்தக் கூற்று குறித்து சிரிக்காமல் சிந்திக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## கைதானவரில் ஒருவர் கான்ஸ்டபிள்

கொழும்பு, ஜூன் 23

இயக்கம் ஒன்றுக்காக பணம் சேகரிப்பதாகக் கூறிக் கொண்டு மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றவர் முஸ்லிம் என்றும், மூன்றாமவர் யாழ்ப்பாணத் தமிழர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரகசியப் பொலீஸார் இவர்கள் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ-3)

# எதிர்க்கட்சிக் குழுவின் படகு கடல் கொந்தளிப்பில்

## மன்னார் விஜயத்தில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 23

மன்னாரில் உள்ள அகதி முகாம்களைப் பார்வையிட அங்கு விஜயம் செய்த எதிர்க்கட்சிக் குழுவினர் கடற் கொந்தளிப்பில் சிக்கி தெய்வாதீனமாக உயிர் தப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று கற்பிட்டியில் இருந்து மன்னாருக்கு அவர்கள் கடல் மார்க்கமாக பயணம் மேற்கொண்ட போது, அவர்கள் பயணம் செய்த படகு கடல் கொந்தளிப்பில் சிக்கிக் கடலில் மூழ்கும் நிலையை அடைந்தது என்றும் —

அச் சமயம் கடலில் நின்ற கப்பல் ஒன்றின் உதவியினால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

### ஜனாதிபதியை சந்திக்கப் போனபோது

# குமார் பொன்னம்பலத்துக்கு ஏற்பட்ட அனுபவம்

கொழும்பு, ஜூன் 23

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகளினால் 'உச்சந்தலை முதல் உள்ளங்கால்' வரை தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசுவதற்காக எட்டுத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் திரு: குமார் பொன்னம்பலமும் சென்றிருந்தார்.

அப்போதுதான் அவர் அவ்வாறு கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அந்த நடவடிக்கை திரு. பொன்னம்பலத்துக்கு கடுஞ்சினத்தை ஏற்படுத்தியதாக 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை — ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் அரசியல்வாதி ஒருவர் பின்னர் பீ. பீ. ஸி. வானொலிக்கு பேட்டி அளித்த சம்பவத்தினால் அரச தரப்பினர் வெறுப்படைந்திருப்பதாகவும் 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## சூலமங்கலம் சகோதரிகளில் ஒருவர் மரணம்

சென்னை, ஜூன் 23

பக்திப் பாடல்கள் பாடுவதில் சிறந்து விளங்கிய சூலமங்கலம் சகோதரிகளில் ஒருவரான திருமதி சூலமங்கலம் ராஜலக்ஷ்மி நேற்று முன்தினம் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 54. சில காலமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

அவர் தமிழக அரசின் கலைமாமணி உட்படப் பல பரிசில்களையும், பட்டங்களையும் பெற்றவர்.

## உலகச் செய்திகள்

### கம்யூனிஸ்டுகள் உண்ணாவிரத பயமுறுத்தல்

மாஸ்கோ, ஜூன் 23

ரஷ்ய வானொலியும் டெலிவிஷனும் ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் பற்றிய தகவல்களை மட்டுமே வெளியிட்டு வருவதை நிறுத்தாவிட்டால், அதனை எதிர்த்து உண்ணாவிரத இயக்கம் நடத்தப்போவதாக கம்யூனிஸ வாதிகள் எச்சரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. [இ-எ]

### ஆப்கனில் அதிகாரப் போட்டி

காபூல், ஜூன் 23

ஆப்கனிஸ்தானில் ஆட்சியாளர் மத்தியில் அதிகாரப் போட்டி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தற்காலிக ஜனாதிபதியாக பதவி வகிக்கும் பேராசிரியர் முஜாகுதின்தாம் முன்னர் அறிவித்தது போன்று போட்டி முஜாஹிதின் கெரில்லாக் குழுத் தலைவரான ரபானியிடம் தலைமைப் பதவியை ஒப்படைக்கப் போவது இல்லை என்றும் —

ஆட்சியை நடத்துவது யார் என்பதைத் தீர்மானிப்பதை 64 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் விடுதலைக் கவுன்ஸிலிடம் தாம் விடப்போவதாகவும் அறிவித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, ஆப்கனில் தீவிர அதிகாரப் போட்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ)

### தென் ஆபிரிக்க பேச்சுக்கள் இடைநிறுத்தம்

கேப்டவுன், ஜூன் 23

தென் ஆபிரிக்க அரசுக்கும் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸுக்கும் இடையே நடந்து வந்த பேச்சுகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுகள் முற்றாகவே முறிவடைந்து விடக்கூடிய ஆபத்து ஏற்பட்டு இருப்பதாக ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

40 கறுப்பின மக்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே தென் ஆபிரிக்க அரசியலில் இப்புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க ஆட்சி அமைப்பில் கறுப்பு இன மக்களும் பங்கு பற்ற வகை செய்வதற்காக இந்தப் பேச்சுக்கள் நடந்து வந்தன. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கனகசபை பரராஜசிங்கம்**

(யாழ்ப்பாணம் — கொழும்பு
பிரபல வர்த்தகர்)

தாயின் மடியில்: **24 — 03 — 1938**
இறைவனடியில்: **23 — 05 — 1992**

அன்பான பேச்சும் அழகான முகமும்
கண் முன்னே தோன்றி மறையுதையா!
பண்பாக எம்முடன் பழகிய நீங்கள்
பரிதவிக்க விட்டுச் சென்று விட்டீர்களே!
எப்போது உங்களை எங்கே நாம் காண்போம்?
எங்கு சென்றீரையா? ஏங்குகின்றோம்!
முப்போதும் நினைந்து இறைவனையே வணங்கி,
ஆத்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்!

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு, எமதில்லம் நாடி வந்து, எம் துயரத்தில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

அன்பு மனைவி,
மக்கள், மருமகன், பேர்த்தி,
உறவினர்கள், நண்பர்கள்,

19, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். [4787]

# ஓராண்டு நீங்கா நினைவலைகள்

தோற்றம்: 15 — 02 — 1933



மறைவு: 04 — 07 — 1991

**மார்க்கண்டு திருவெங்கடாசலப்பெருமான்**

(பதவிநிலை உத்தியோகத்தர், கமத்தொழில் திணைக்களம் - வவுனியா)

திதி: **23-06-1992**

சிம்மக் குரலைக் கேட்பதெப்போ
சிரித்த முகத்தைக் காண்பதெப்போ
நகைச்சுவை வார்த்தைகள் கேட்பதெப்போ
நல்ல இதயத்தைக் காண்பதெப்போ
ஆசை மொழிகள் கேட்பதெப்போ
அஞ்சா நெஞ்சத்தைக் காண்பதெப்போ
காலமும் கண்ணீரால் கரைந்ததுவே
கவலையே காலமாய் நிலைத்ததுவே!

இன்று எமது இல்லத்தில் நடைபெறுகின்ற முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்.

''இரத்தின பவனம்'',
அல்வாய் மேற்கு,
அல்வாய். (21481)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## கொழும்பிலிருந்து சட்டத்தரணி

கொழும்பு, ஜூன் 23

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கைப் பிரஜைகளான சந்தேக நபர்களின் சார்பில் ஆஜராகி வாதாடுவதற்காக கொழும்பு வழக்கறிஞர் மோதிலால் நேரு விரைவில் சென்னைக்குச் செல்லவிருக்கின்றார்.

இவ்வாறு 'சண்டே ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது. (இ-எ)

## ஸ்கொட்லண்ட்யாட் குழு கொழும்பில்!

கொழும்பு, ஜூன் 23

லண்டனில் உள்ள வங்கி ஒன்றில் இடம்பெற்ற மோசடிச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்திவரும் ஸ்கொட்லண்ட்யாட் பொலீஸ் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

வங்கியில் இடம்பெற்ற காசோலை மோசடியில் சம்பந்தப்பட்ட இலங்கையர் ஒருவரைத் தேடியே குழு இங்கு வந்துள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

## யாருடையவை?

யாழ்ப்பாணம், ஜூன் 23

இம்மாதம் 15 ஆம் திகதியன்று கொம்படிப் பாதையில் தாம் கண்டெடுத்த முக்கிய ஆவணங்கள், பத்திரங்களை மல்லாகத்தைச் சேர்ந்த வ. கதிர்காமத்தம்பி உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

இந்தப் பத்திரங்கள் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பெண்மணி ஒருவரினுடையனவாகும். உரியவர் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். (அ)

## 21 பேர் வேட்புமனு

புதுடில்லி, ஜூன் 23

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 21 வேட்பாளர்கள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

வேட்புமனு தாக்கல் செய்யும் கடைசி நாள் இம்மாதம் 24 ஆம் திகதி ஆகும். ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 13 திகதி நடைபெறவுள்ளது.

## மத போதனைக்கு ஆசிரியர்கள்

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் மத போதனைகளையும், ஒழுக்க நெறி முறைகளையும் போதிக்க விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

### புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் சம்பந்தப்பட்டிருப்பது இறுதியில் பொருத்தமற்றதாகும் என்பதே யதார்த்த நிலையாகும். விடுதலைப் புலிகளுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வைக் காணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. மோதிலால் நேரு தெரிவித்திருக்கின்றார். (இ-எ)

### வழக்குத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் விஜசுந்தரவிற்கு இராணுவத்தலைமைப் பீடம் உத்தரவிட்டிருந்தது.

இந்தியாவில் 1980 இல் பயிற்சி பெற்ற காலத்தில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக தாம் போர்முனை நடவடிக்கைகளுக்குத் தகுதியானவரல்லர் என்று கூறி மேஜர் விஜசுந்தர அடிப்படை உரிமை [illegible] தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

# இனப்பிரச்சினைத் தீர்வில் மு. க வுக்கு முக்கிய பங்காம்!

## பிரபல சோதிடர்கள் ஆருடம்

சென்னை, ஜூன் 23

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் கலைஞர் மு. கருணாநிதி முக்கிய பங்கு வகிப்பார் என்று சோதிடரீதியாக ஆருடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணாநிதி மீண்டும் முதலமைச்சர் ஆவாரா என்பது குறித்து தமிழகத்தின் பிரபல நான்கு சோதிடர்களிடம் பேட்டி காணப்பட்டது. அப்போதே ஒருவர் முன்கண்ட ஆருடத்தைத் தெரிவித்தார். நான்கு ஜோதிடர்கள் கூறிய ஆருட விவரங்கள் வருமாறு:-

செல்வி ஜெயலட்சுமி:

1993 ஆகஸ்ட் வரை கருணாநிதியால் முதலமைச்சராக வரமுடியாது. அதன் பின்னர் அவர் பதவிக்கு வர திட்டவட்டமான சாத்தியம் உண்டு. அப்போது அவர் தேர்தலுக்கு நின்றால் நிச்சயம் வெற்றியீட்டுவார்.

சுந்தரம்:

முதலமைச்சர் பதவியிலும் பார்க்கமிகப் பெரிய பதவியை அவர் பெறுவார். ஜனாதிபதியாக அல்லது பிரதமராக அவர் வரமுடியும் இதை நம்புவது மிகவும் கடினமாக இருக்கலாம். காங்கிரஸுடன் அவருக்கு நெருக்கமான உறவு ஏற்பட வாய்ப்பு உண்டு. அது விரைவில் ஏற்படும்.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 1993 மார்ச் மாதத்தில் கருணாநிதி முக்கிய பங்கு வகிப்பார். ஜனாதிபதி பிரேமதாஸா கருணாநிதியை ஆதரிப்பார். பிரபாகரனும் தீர்வுக்குச் சம்மதிப்பார்.

கருணாநிதியின் சாதகம் சாதாரணமானதல்ல; இந்திய வானில் மிகச் சக்தி வாய்ந்த சாதகக் குறிப்பு அவருடையது.

கோவர்த்தனன்:

சரித்திரத்தில் கருணாநிதி ஒரு கதாநாயகனாக நிச்சயமாக இடம்பெறுவார். இது குறித்து சந்தேகமே இல்லை, சரித்திரத்தில் அவர் முக்கிய இடத்தைப் பெறுவார். உலகில் உள்ள தமிழர்கள் அனைவராலும் கருணாநிதி பாராட்டப்படுவார்.

கலியூர் நாராயணன்:

அதிகாரத்துக்கு வரக்கூடிய சகல அம்சங்களும் கருணாநிதியின் சாதகத்தில் உள்ளன. (அ-எ)

# குடும்ப பதிவு அட்டையில் மாற்றம் செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். செயலகத்தால் வழங்கப்பட்ட குடும்பப் பதிவு அட்டைகளில் மாற்றம் செய்யவும் புதிய அட்டைகளை வழங்கவும் பிரதேச செயலாளர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட அட்டைகளில் புதிதாக மாற்றம் செய்வதற்கு அல்லது புதிய அட்டை ஒன்றை வழங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து 20 ரூபா அறவிடப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

தொழில் மற்றும் கல்வி நோக்கத்திற்காக வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு வந்து தங்கியுள்ளோர் அவர்கள் சார்ந்த நிறுவனத்தின் சான்று அறிக்கையை சமர்ப்பித்து தனிநபர் குடும்ப அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

### இந்திய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொட்டம்மானையும் நாடு கடத்தும்படி சம்பிரதாயபூர்வமான கோரிக்கையை இந்தியக் குழு இலங்கையிடம் சமர்ப்பிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்ட நடைமுறைகள் பற்றி பேச்சுக்கள் நடத்தவே இந்திய அதிகாரிகள் இங்கு வருகின்றனர் என்று கொழும்பில் உள்ள வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-எ-3)

# யுத்தத்தில் காயமடைந்து ஊனமுற்ற படையினருக்கு விவசாயத்துறைப் பயிற்சி!

கொழும்பு, ஜூன் 23

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் காயமடைந்து ஊனமாகிப்போன படையினருக்கு விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளில் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்றை பாதுகாப்பு அமைச்சு குருநாகலில் விரைவில் அமைக்கவிருக்கிறது.

இந்த நிலையத்தில் வைத்து சிவில் பாதுகாப்புப் பயிற்சி வழங்குவதும், இப்பயிற்சித் திட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்கும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

### பிறநாட்டிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதைக் கடத்தல் தடுப்பு அதிகாரியாக பணி புரிந்த அமெரிக்கப் பிரஜை ஒருவரை மெக்ஸிக்கோவில் வைத்துக் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு மெக்ஸிகோ டாக்டரை, அந்த நாட்டில் இருந்து அமெரிக்க அதிகாரிகள் கடத்தி வந்து அமெரிக்க நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தியிருக்கிறார்கள்.

இதனை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் தீர்ப்பளிக்கையிலேயே உயர் நீதிமன்றம் முன்கண்டவாறு பெரும்பான்மைத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

நாகரிக உலகை ஆழ்ந்த குழப்பத்தில் ஆழ்த்திய பயங்கர தீர்ப்பு இது என்று, கடத்தலை எதிர்த்து தீர்ப்பு வழங்கிய [illegible] போல் [illegible] தெரிவித்தார். (உ-எ)

## 3 மாதங்களுக்கு தட்டுப்பாடு இல்லையாம்

கொழும்பு, ஜூன் 23

யாழ். குடாநாட்டில் பாதுகாப்பு படையினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும் அங்கு 3 மாதங்களுக்குரிய உணவுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது. (த)

### கூட்டறிக்கை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின் முடிவில் கூட்டறிக்கை வெளியிடுவது பற்றிய பிரச்சினையை ஜனாதிபதியின் செயலாளர் திரு கே. எச். ஜே. விஜேதாசா எழுப்பினார். அது பற்றி உட்கார்ந்து பேசுவதற்கு முன்னரே காங்கிரஸ் மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டு மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

புறப்படுவதற்கு முன்னர் ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர் திரு. எல். கேதீஸ்வரன், ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனைப் பார்த்து, கூட்டறிக்கை ஒன்றுக்கு தமிழர்கள் உடன்பாடில்லை என்று கூறினார்.

அத்துடன் கூட்டறிக்கை வெளியிடும் திட்டம் கைவிடப்பட்டது. பின்னர் ஜனாதிபதி செயலகம் தனித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. (உ-எ)

# மரண அறிவித்தல்

**சின்னத்துரை செல்லையா**

மாதகலைச் சேர்ந்த சின்னத்துரை செல்லையா 17-06-1992 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற திருஞானாம்பிகையின் அன்புக் கணவரும், ஞானபண்டிதன் (வேலைப்பகுதி முகாமையாளர்/பதில் செயலாளர், ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்), விசாகபண்டிதன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கலா - அருண் (லண்டன்), யோகபண்டிதன் (கணக்காளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற சட்டத்தரணி சரோஜினி ஞானபண்டிதன், அருணகிரிநாதன் (பொறியியலாளர், லண்டன்), நிலானி (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மாமனாரும் மீனா, தினுஷா ஆகியோரின் அன்புப் பேரனும், துரையப்பா (கோலாலம்பூர்), மகேஸ்வரி, அன்னப்பிள்ளை ஆகியோரின் ஆசைச் சகோதரரும், திருமதி சுப்பிரமணியம் (மூளாய்), திரு - திருமதி சி எம். சின்னையா (சட்டத்தரணி, கொழும்பு), பேராசிரியர் எஸ் எஸ். இரத்தினம், எஸ். ரி இரத்தினம் (சிங்கப்பூர்) காலஞ் சென்ற எஸ். எம். இரத்தினம் (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று திங்கட்கிழமை (22-06-1992) பிற்பகல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ஞானபண்டிதன் (மகன்)

இல: 47, பெல்மண்ட் வீதி,
ஹல்ஸ்டோப், கொழும்பு - 12.

(21497)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org